www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**வகுப்பு - 12** **தமிழ் வினாவங்கி** **14.10.24**

**கற்பவை கற்றபின் மீட்டறிவோம்**

**மீட்டறிதல் தேர்வு**

**பின்வரும் சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| 01. மலரடி | 02. நன்மொழி | 03. தாழ்கடல் | 04. பொய்யா |
| 05. உயர்ந்தோர் | 06. பெருமிதம் | 07. மறத்தல் | 08. அருந்திறல் |
| 09. பெருங்கடல் | 10. திருந்திய | 11. ஓர்மின் | 12. உன்னவிர் |
| 13. அடையா | 14. அறியா | 15. அரவக்கடல் | 16. நன்கலம் |
| 17. கருந்தடம் | 18. வெங்குருதி | 19. முத்துமுத்தாய் | 20. செற்றவர் |
| 21. சிறாஅர் | 22. உவகை | **23.** மலைதல் | 24. வெரீஇய |
| 25. நெடுவேல் | 26. அறிவும் புகழும் | 27. கடல்தானை | 28. கொடுங்கோல் |
| 29. செந்நிறம் | 30. வியர்வைவெள்ளியம் | 31. தாழ்கடல் | 32. விரிகடல் |
| 33. சொற்ற | 34. கொடுத்த | 35. அழுகை | 36. இளிவரல் |
| 37. .போந்து | 38. ஆடலும் பாடலும் | 39. ஊன்ற ஊன்ற | 40. வெங்கதிர் |
| 41. வெகுளி | 42. தடக்கை | 43. பாதகர் | 44. நெடுவழி |
| 45. வாய்த்த | 46. சினந்து | 47. புதுப்பெயல் | 48. சிவந்து |
| 49. மறத்தல் | 50. ஈந்த | 51. இலாத | 52. உளது |
| 53. வளைஇ | 54. மருட்கை | 55. அச்சம் | 56. வெள்ளருவி |
| 57. தொல்நெறி | 58. வெந்து | 59. வயங்குமொழி | 60. புக்க |
| 61. மாதவம் | 62. நகை | 63.. நன்னாடு | 64. நுந்தை |
| 65. உழாஅது | 66. கவாஅன் | 67. உலகு | 68. செம்பரிதி |
| 69. நீலம் | 70. அன்பும் அறமும் | 71. உவப்ப | 72.செந்தமிழ் |

**பின்வரும் சொற்களுக்குப் புணர்ச்சி விதி எழுதுக :**

| | | | |
|---|---|---|---|
| 01. செம்பரிதி | 02. வானமெல்லாம் | 03. உன்னையல்லால் | 04. செந்தமிழே |
| 05. ஆங்கவற்றுள் | 06. தனியாழி | 07. வெங்கதிர் | 08. அருங்கானம் |
| 09. செல்லிடத்து | 10. எத்திசை | 11. உள்ளொன்று | 12. இனநிரை |
| 13. ஒருமையுடன் | 14. பூம்பாவாய் | 15. பெருங்கடல் | 16. தலைக்கோல் |
| 17. ஏழையென | 18. உரனுடை | 19. புதுப்பெயல் | 20. முன்னுடை |
| 21. நன்மொழி | | | |

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பின்வரும் சொற்களுக்குப் உறுப்பிலக்கணம் எழுதுக : எழுதுக:** **மதிப்பெண் - 2**

| | | | |
|---|---|---|---|
| 01. சாய்ப்பான் | 02. விம்முகின்ற | 03. வியந்து | 04. வந்து |
| 05. உயர்ந்தோர் | 06. விளங்கி | 07. தந்தனன் | 08. பொலிந்தான் |
| 09. நினைக்கின்ற | 10. வைத்து | 11. பேசுவார் | 12.கண்டான் |
| 13. அமர்ந்தான் | 14. செய்த | 15. சாற்றி | 16.தொழுதனர் |
| 17. நகை | 18. மருட்கை | 19. வெகுளி | 20. அறிந்து |
| 21. அறுத்து | 22. பகைத்த | 23. களைந்து | 24.பழித்தனர் |
| 25. இடிந்து | 26. ஈந்த | 27. அமர்ந்தனன் | 28. தாங்கிய |
| 29. இருந்தாய் | 30. கலங்கி | 31. கண்டனன் | |

**பொருத்துக:**

**01)**
அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2) தி.சு. நடராசன்
இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4) கி. ராஜநாராயணன்

**அ)** 4, 3, 2, 1 **ஆ)** 1, 4, 2, 3 **இ)** 2, 4, 1, 3 **ஈ)** 2, 3, 4, 1

**02)**
அ) அவன், அவள், அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை
ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை
இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்
ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்

**அ)** 4, 1, 2, 3 **ஆ)** 2, 3, 4, 1 **இ)** 3, 4, 1, 2 **ஈ.** 4, 3, 1, 2

**03)**
அ) குரங்குகள் - 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) விலங்குகள் - 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் - 3) குளிரால் நடுங்கின
ஈ) பசுக்கள் - 4) மேய்ச்சலை மறந்தன

**அ)** 1, 3, 4, 2 **ஆ)** 3, 4, 2, 1 **இ)** 3, 2, 1, 4 **ஈ)** 2, 1, 3, 4

**04) வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக.**
அ) பாலை பாடினான் 1) தேரை என்னும் உயிரினத்தைப் பார்த்தான்
ஆ) பாலைப் பாடினான் 2) தேரினைப் பார்த்தான்
இ) தேரை பார்த்தான் 3) பாலினைப் பாடினான்
ஈ) தேரைப் பார்த்தான் 4) பாலைத் திணை பாடினான்

**அ)** 4, 1, 3, 2 **ஆ)** 2, 3, 1, 4 **இ)** 4, 3, 1, 2 **ஈ)** 2, 4, 1, 3

www.Padasalai.Net

05) அ) உரிமைத்தாகம் 1) பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி 2) பூமணி
இ) ஜலாலுத்தீன் ரூமி 3) பக்தவச்சல பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை 4) சாகித்திய அகாதெமி

**அ)** 2, 4, 3, 1 **ஆ0** 3, 4, 1, 2 **இ)** 2, 4, 1, 3 **ஈ)** 2, 3, 4, 1

06) அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - சேர்ந்தாரைக் கொல்லி
ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - ஞாலத்தின் மாணப் பெரிது
இ) சினம் - தெய்வத்துள் வைக்கப்படும்
ஈ) காலத்தினாற் செய்த நன்றி - நன்மை கடலின் பெரிது

**அ)** 4, 3, 2, 1 **ஆ)** 3, 4, 1, 2 **இ)** 1, 2, 3, 4 **ஈ)** 2, 3, 4, 1

07) அ) மாச்சீர் - 1) கருவிளம், கூவிளம்
ஆ) காய்ச்சீர் - 2) நாள், மலர்
இ) விளச்சீர் - 3) தேமாங்காய், புளிமாங்காய்
ஈ) ஓரசைச்சீர் - 4) தேமா, புளிமா

**அ)** 1, 2, 4, 3 **ஆ) 4, 3, 1, 2** **இ)** 2, 3, 1, 4 **ஈ)** 3, 4, 2, 1

08) அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2) கல்கோடரி
இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம்
ஈ) எழும்பூர் - 4) கூவம்

**அ)** 1, 2, 4, 3 **ஆ)** 4, 2, 1, 3 **இ)** 4, 1, 2, 3 **ஈ)** 2, 4, 3, 1

09) அ) காதை - 1) கந்தபுராணம்
ஆ) சருக்கம் - 2) சீவகசிந்தாமணி
இ) இலம்பகம் - 3) சூளாமணி
ஈ) படலம் - 4) சிலப்பதிகாரம்

**அ) 4, 3, 2, 1** **ஆ)** 3, 4, 1, 2 **இ)** 3, 4, 2, 1 **ஈ)** 4, 3, 1, 2

10) அ) ஆமந்திரிகை - பட்டத்து யானை
ஆ) அரசு உவா - மூங்கில்
இ) கழஞ்சு - இடக்கை வாத்தியம்
ஈ) கழை - எடை அளவு

**அ) 3, 1, 4, 2** **ஆ)** 4, 2, 1, 3 **இ)** 1, 2, 3, 4 **ஈ)** 4, 3, 2, 1

www.Padasalai.Net

**11)** அ) பாம்போடு உடன் உறைந்தற்று - 1) தீக்காய்வார்

ஆ) செத்தார் - 2) சீர் அழிக்கும் சூது

இ) வறுமை தருவது - 3) கள் உண்பவர்

ஈ) இகல்வேந்தர் சேர்ந்து ஒழுகுவார் - 4) உடம்பாடு இலாதவர்

**அ)** 1, 2, 3, 4 **ஆ)** 2, 3, 4, 1 **இ)** 4, 1, 3, 2 **ஈ)** 4, 3, 2, 1

**12)** அ) அறம் - 1) கர்ணன்

ஆ) வலிமை - 2) மனுநீதிச்சோழன்

இ) நீதி - 3) பீமன்

ஈ) வள்ளல் - 4) தருமன்

**அ)** 3, 2, 1, 4 **ஆ)** 4, 3, 2, 1 **இ)** 2, 4, 3, 1 **ஈ)** 4, 3, 1, 2

**சரியான :விடை தேர்க:**

**இயல் 1**

**01.** பிழையான தொடரைக் கண்டறிக.

**அ)** காளைகளைப் பூட்டி ஏர் உழுதனர்

**ஆ)** மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

**இ)** காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

**ஈ)** நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

**02.** பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.

**அ)** அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

**ஆ)** புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.

**இ)** வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது

**ஈ)** மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

**03.** இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்

**அ)** யாப்பருங்கலக்காரிகை **ஆ)** தண்டியலங்காரம்

**இ)** தொல்காப்பியம் **ஈ)** நன்னூல்

**04.** “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்

**1)** பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

**2)** பொதிகையில் தோன்றியது **3)** வள்ளல்களைத் தந்தது.

**அ)** 1 மட்டும் சரி **ஆ)** 1, 2 இரண்டும் சரி

**இ)** 3 மட்டும் சரி **ஈ)** 1, 3 இரண்டும் சரி

**05.** “மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்

**அ)** அடி மோனை, அடி எதுகை **ஆ)** சீர் மோனை, சீர் எதுகை

**இ)** அடி எதுகை, சீர் மோனை **ஈ)** சீர் எதுகை, அடி மோனை

www.Padasalai.Net

**06.** கருத்து 1: இயல்பு வழக்கில் தொடரமைப்பு என்பது எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2: தொடரமைப்பு சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

**அ)** கருத்து 1 சரி **ஆ)** கருத்து 2 சரி

**இ)** இரண்டு கருத்தும் சரி **ஈ)** கருத்து 1 சரி 2 தவறு

## இயல் 2

**01.** தமிழில் திணைப் பாகுபாடு ________________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

**அ)** பொருட்குறிப்பு **ஆ)** சொற்குறிப்பு **இ)** தொடர்க்குறிப்பு **ஈ)** எழுத்துக்குறிப்பு

**02.** "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே

அஃறிணை என்மனார் அவரல பிறவே" இந்நூற்பா இடம் பெற்ற நூல் -

**அ)** நன்னூல் **ஆ)** அகத்தியம் **இ)** தொல்காப்பியம் **ஈ)** இலக்கண விளக்கம்

**03.** யார்? எது? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே -

**அ)** அஃறிணை, உயர்திணை **ஆ)** உயர்திணை, அஃறிணை

**இ)** விரவுத்திணை, அஃறிணை **ஈ)** விரவுத்திணை, உயர்திணை

**04.** நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்பமாதவன் குறிப்பிடுவது

**அ)** சூரிய ஒளிக்கதிர் **ஆ)** மழை மேகங்கள்

**இ)** மழைத்துளிகள் **ஈ)** நீர்நிலைகள்

**05.** வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

**அ)** பருவநிலை மாற்றம் **ஆ)** மணல் அள்ளுதல்

**இ)** பாறைகள் இல்லாமை **ஈ)** நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

**06.** உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது

**அ)** கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

**ஆ)** பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது.

**இ)** கால நிலை மாறுபடுகிறது **ஈ)** புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

**07.** **பொய்யா வானம்** புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக்குறிப்பு

**அ)** வினைத்தொகை **ஆ)** உரிச்சொல் தொடர்

**இ)** இடைச்சொல் தொடர் **ஈ)** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

□ □ □

## இயல் 3

01. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.

**அ)** தேவையான இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்

**ஆ)** தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்

**இ)** நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்

**ஈ)** வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

02. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை -

**அ)** அறவோர், துறவோர் **ஆ)** திருமணமும் குடும்பமும்

**இ)** மன்றங்களும் அவைகளும் **ஈ)** நிதியமும் சுங்கமும்

03. <u>இவற்றை</u> வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது -

**அ)** வக்கிரம் **ஆ)** அவமானம் **இ)** வஞ்சனை **ஈ)** இவை அனைத்தும்

04. "உலா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

**அ)** சடாயு, இராமன் **ஆ)** இராமன், குகன்

**இ)** இராமன், சுக்ரீவன் **ஈ)** இராமன், சவரி

05. "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

**அ)** தனிக்குடும்ப முறை **ஆ)** விரிந்த குடும்ப முறை

**இ)** தாய்வழிச் சமூக முறை **ஈ)** தந்தைவழிச் சமூக முறை

06. "துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது - என்ற இராமனின் கூற்று பின்வரும் புழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?

**அ)** நிழலின் அருமை வெயிலில் தெரியும். **ஆ)** சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

07. கடலின் பெரியது -

**அ)** உற்ற காலத்தில் செய்த உதவி **ஆ)** பயன் ஆராயாமல் செய்த உதவி

**இ)** தினையளவு செய்த உதவி

08. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?

**அ) செய்யாமல் செய்த உதவி** **ஆ)** பயன்தூக்கார் செய்த உதவி

**இ)** தினைத்துணை நன்றி **ஈ)** காலத்தினால் செய்த நன்றி

□ □ □

## இயல் 4

01. ”காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை” -இத்தொடரில் **கலன்** உணர்த்தும் பொருள்
**அ)** போர்க்கருவி **ஆ)** தச்சுக்கருவி **இ)** இசைக்கருவி **ஈ)** வேளாண்கருவி

02. சுரதா நடத்திய கவிதை இதழ் ----
**அ)** இலக்கியம் **ஆ)** காவியம் **இ)** ஊர்வலம் **ஈ)** விண்மீன்

03. “விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு” - இத்தொடர் தரும் முழுமையான பொருள்
**அ)** விண்ணும் வெண்மதியும் வேறு வேறு
**ஆ)** விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
**இ)** வெண்மதியும் முகிலும் வேறு வேறு
**ஈ)** விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

04. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.
**அ)** வசம்பு **ஆ)** மணத்தக்காளியிலைச் சாறு **இ)** கடுக்காய் **ஈ)** மாவிலைக்கரி

05. **“**குழிமாற்று**”** எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
**அ)** இலக்கியம் **ஆ)** கணிதம் **இ)** புவியியல் **ஈ)** வேளாண்மை

## இயல் 5

01. படிமம் என்பதன் பொருள் -
**அ)** சொல் **ஆ)** செயல் **இ)** காட்சி **ஈ)** ஒலி

02. “காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்”
இக்கவிதையில் ________________ பயின்று வந்துள்ளது.
**அ)** பயன்படிமம் **ஆ)** வினைப்படிமம் **இ)** மெய்ப்படிமம் **ஈ)** உருப்படிமம்

03. **கூற்று** : உவமை உருவகம் போலப் படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.
**காரணம்** : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்தினை விளக்குவதில்லை.
**அ)** கூற்று சரி, காரணம் தவறு **ஆ)** கூற்று தவறு, காரணம் சரி
**இ)** கூற்றும் சரி, காரணமும் சரி **ஈ)** கூற்றும் தவறு, காரணமும் தவறு

04. மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க.
**அ)** நெருஞ்சிக் கட்கின் புதுமலர் முட்பயந் தாங்கு ...
**ஆ)** கட்டில் நிணக்கும் இழிசினன் கையது ,,,
**இ)** பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும் **...**
**ஈ)** வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப ...

**05.** சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம் -

**அ)** நேரடி மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

**ஆ)** மென்பொருள் வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு

**இ)** மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

**ஈ)** அ, ஆ, இ - அனைத்தும்

**06. கூற்று** : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வருகின்றனர்.

**காரணம்** : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம் துணி சார்ந்ததாகவே இருந்தது.

**அ)** கூற்று சரி, காரணம் தவறு **ஆ)** கூற்று தவறு, காரணம் சரி

**இ)** கூற்று தவறு, காரணம் தவறு **ஈ)** கூற்று சரி, காரணம் சரி

**07.** "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்" - இத்தொடர் உணர்த்தும் பண்பு

**அ)** நேர்மையான பண்பு **ஆ)** எதிர்மறைப் பண்பு

**இ)** முரண் பண்பு **ஈ)** இவை அனைத்தும்

**08** "விளியறி ஞமலி" - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?

**அ)** எருது **ஆ)** குதிரை **இ)** நாய் **ஈ)** யாளி

## இயல் 6

**01.** ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் ...

**அ)** சிவஞான முனிவர் **ஆ)** மயிலைநாதர் **இ)** ஆறுமுகநாவலர் **ஈ)** இளம்பூரணர்

**02. கூற்று** 1 - காப்பியம் என்னும் சொல் காப்ப இயம் எனப் பிரிந்து மரபைக் காப்பது, இயம்புவது, வெளிப்படுத்துவது, மொழியைச் சிதையாமல் காப்பது என்றெல்லாம் பொருள் தருகிறது.

**கூற்று** 2 - ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று நீலகேசி

**அ)** கூற்று 1 சரி, கூற்று 2 தவறு **ஆ)** கூற்று 2 சரி கூற்று 1 தவறு

**இ)** இரண்டும் சரி **ஈ)** இரண்டும் தவறு

**03. தவறான இணையைத் தேர்க.**

| | **பாவகை** | **இலக்கியம்** |
|---|---|---|
| **அ)** | விருத்தப்பா | நாலடியார் |
| **ஆ)** | ஆசிரியப்பா | அகநானூறு |
| **இ)** | கலிவெண்பா | தூது |
| **ஈ)** | குறள்வெண்பா | திருக்குறள் |

**04.** ஆர்ப்பரிக்கும் கடல்;
அதன் அடித்தளம்
மௌனம், மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது

**அ)** இரைச்சல் **ஆ)** குறைகுடம் கூத்தாடும்

**இ)** நிறைகுடம் நீர்த்தழும்பல் இல் **ஈ)**புறஅசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது.

**05.** ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் □

**1.** மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

**2.** ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

**அ)** 1 சரி 2 தவறு **ஆ)** 1 தவறு 2 சரி

**இ)** 1 தவறு 2 தவறு **ஈ)** 1 சரி 2 சரி

**06. வேறுபட்டதைக் குறிப்பிடுக.**

**அ)** அண்மைக் காட்சித் துணிப்பு **ஆ)** சேய்மைக் காட்சித் துணிப்பு

**இ)** நடுக்காட்சித் துணிப்பு **ஈ)** காட்சி மறைவு

**06. கவிதைக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

மனமோ மாட்டுவண்டி
பாதையொழுங்கில் போக நினைக்கும் மாடு
இப்படி இருந்தால் எப்படி நகரும்
வாழ்க்கைச் சக்கரம்
ஊர் போகும் பாதையில்
சக்கரம் உருண்டால்
அதுவே அறிவு; அதுவே தெளிவு.

**அ)** எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு

**ஆ)** சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு.

**இ)** அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்.

**07. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோல் மாண்டபயத்ததாம் - மாரி
வறந்தக்கால் போலுமே வாலருவி நாட!
சிறந்தக்கால் சீரியார் நட்பு.

**அ)** பழையம் எனக்கருதிப் பண்புஅல்ல செய்யும் கெழுதமைமை கேடு தரும்.

**ஆ)** எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை அதிர வருவதோர் நோய்.

**இ)** நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின் அல்லல் படுப்பதூஉம் இல்

**08.** அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்?

**அ)** வாள் போல் பகைவர் **ஆ)** மெய்ப்பொருள் காண்பவர்

**இ)** எண்ணியாங்கு எய்துபவர் **ஈ)** தீயினத்தார்

**09.** திண்ணியர் என்பதன் பொருள்

**அ)** அறிவுடையவர் **ஆ)** மன உறுதியுடையவர்

**இ)** தீக்காய்வார் **ஈ)** அறிவிலார்

**10.** ஆராய்ந்து சொல்கிறவர் -

**அ)** அரசர் **ஆ)** சொல்லியபடி செய்பவர் **இ)** தூதுவர் **ஈ)** உறவினர்

**11.** நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்

**அ)** வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்

**ஆ)** மனத்திட்பம் உடையவர்

**இ)** அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்

**ஈ)** சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்

12. எளியது - அரியது என்பன

**அ)** தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை

**ஆ)** சொல்வது - சொல்லியபடி செய்வது

**இ)** சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்ப

**ஈ)** மெய்ப்பொருள் காண்பது - உருவு கண்டு எள்ளாதது

13. உடம்பாடு இலாதார் வாழ்க்கை குடங்கருள்
புாம்போடு உடன்உறைந் தற்ற - என்ற குறளில் இடம் பெறும் அணி
**அ)** உவமை அணி **ஆ)** எடுத்துக்காட்டுவமை அணி **இ)** உருவக அணி

## இயல் - 7

01. பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.
**அ)** கர்ணன் தோற்றான் போ
**ஆ)** வயதில் சிறியவள், ஆனாலும் தலைவி!
**இ)** இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு.
**ஈ)** இந்தா போறான் தருமன்

02. தொன்மம் பற்றிய கூற்றுகளுள் தவறான ஒன்றைத் தேர்க.
**அ)** உருவாக்கப்பட்டு இறுகி விட்ட வடிவங்கள்

**ஆ)** பழங்கதையைக் கொண்டு கருத்தை விளக்குவது

**இ)** நம்ப முடிவயாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகள் செய்திகள்

**ஈ)** விளங்காத கருத்துகளைப் பழமொழியின் மூலம் விளக்குவது

03. "சாபவிமோசனம்", "அகலிகை" கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
**அ)** கு. அழகிரிசாமி **ஆ)** புதுமைப்பித்தன்
**இ)** ஜெயமோகன் **ஈ)** எஸ். இராமகிருட்டிணன்

04. "பலர் துஞ்சவும் தான் துஞ்சான்" - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்
**அ)** சோழன் நெடுங்கிள்ளியை பாணர் **ஆ)** சோழன் நலங்கிள்ளியை கோவூர்கிழார்
**இ)** கணைக்கால் இரும்பொறையை கபிலர் **ஈ)** கரிகாலனை உருத்திரங்கண்ணனார்

05. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
**அ)** நம்பிக்கை **ஆ)** பெருமிதம் **இ)** புகழ் **ஈ)** அச்சம்

06. முச்சந்தி இலக்கியம் என்பது -
**கூற்று 1** - கதை வடிவிலான வடிவம் உடையது

**கூற்று 2** - பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது.

**அ)** கூற்று 1 சரி, கூற்று 2 தவறு **ஆ)** கூற்று 1, 2 சரி

**இ)** கூற்று 1, 2 தவறு **ஈ)** கூற்று 1 தவறு கூற்று 2 சரி

**07. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்** - இத்தொடரில் பெயரெச்சம்

**அ)** உண்டு **ஆ)** பிறந்து **இ)** வளர்ந்த **ஈ)** இடந்தனில்

**08. யானை புக்க புலம் போல** - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர்

**அ)** தனக்குப் பயன்படும், பிறருக்குப் பயன்படாது

**ஆ)** தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது

**இ)** பிறருக்குப் பயன்படும், தனக்குப் பயன்படாது

**ஈ)** தனக்கும் பயன்படும், பிறருக்கும் பயன்படும்

## இயல் 8

**01. கூற்று** :19-ஆம் நூற்றாண்டில் குறியீட்டியம் ஓர் இலக்கியக் கோட்பாடாக உருப்பெற்றது.

**காரணம்** : பொதலேர், ரைம்போ, வெர்லேன், மல்லார்மே முதலதனவர்கள் குறியீட்டியத்தை வளர்த்தார்கள்.

**அ)** கூற்று சரி, காரணம் தவறு **ஆ)** கூற்று சரி, காரணம் சரி

**இ)** கூற்று தவறு காரணம் தவறு **ஈ)** கூற்று தவறு, காரணம் சரி

**02.** சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும் குறியீடுகள்

**அ)** உவமை **ஆ)** உவமேயம் **இ)** உத்தி **ஈ)** உள்ளுறை உவமை

**03.** "திட்டம்" என்னும் தலைப்பில் "வரங்கள் சாபங்கள் ஆகுமென்றால் இங்கே தவங்கள் எதற்காக?" என்று எழுதப்பட்டுள்ள கவிதையில் "வரம்" எதற்குக் குறியீடாகிறது?

**அ)** அமுதசுரபி **ஆ)** ஆதிரைப் பருக்கை

**இ)** திட்டம் **ஈ)** பயனற்ற விளைவு

**04.** மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது?

**அ)** குறியீடு **ஆ)** படிமம் **இ)** அங்கதம் **ஈ)** தொன்மம்

**05.** சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி

**அ)** உதகமண்டலம் **ஆ)** விழுப்புரம் **இ)** திண்டிவனம் **ஈ)** தருமபுரி

**06.** பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

**அ)** தனித்தமிழ்த் தந்தை - மு. வரதராசனார்

**ஆ)** ஆராய்ச்சியில் பேரறிஞர் - மயிலை சீனி. வேங்கடசாமி

**இ)** தமிழ்த்தென்றல் - திரு.வி.க.

**ஈ)** மொழி ஞாயிறு - தேவநேயப் பாவாணர்

**07.** ச.த.சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்

**அ)** பௌத்தமும் தமிழும் **ஆ)** இசுலாமும் தமிழும்

**இ)** சமணமும் தமிழும் **ஈ)** கிறித்துவமும் தமிழும்

www.Padasalai.Net

**08.** நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது

**அ)** தமது வீட்டு முகவரியை **ஆ)** தமது குடும்பத்தை

**இ)** தமது அடையாளத்தை **ஈ)** தமது படைப்புகளை

**09.** கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

**அ)** ஆய் அண்டிரனும் அதிகனும் **ஆ)** நல்லியக்கோடனும் குமணனும்

**இ)** நள்ளியும் ஓரியும் **ஈ)** பாரியும் காரியும்

**விடை எழுதுக:**

**01.** முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் -- இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

**02** தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

**03.** “படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக” - இச் சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

**04.** விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்து தொடர் அமைக்க.

**05. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

**அ)** கவிஞர் ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம்.

**அ)** தமிழறிஞர். முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்

**இ)** தாய்மொழி ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும்.

**ஈ)** சிறுகதை ஆசிரியர்; முதல் பாதி நவீனம்

**உ)** முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ்மாதம்

**06.** மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?

**07.** உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

**08.** வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.
மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

**09. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைக்க.**

1. முன் 2. தானே 3. கொண்டு 4. விட்டான்

**10.** காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள்மயக்கத்திற்குச் சான்று தருக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11. **சலசல, வந்து வந்து, கலகல, விம்மி விம்மி** - இவற்றில் இரட்டைக்கிளவித் தொடர்களை எழுதி அவற்றை எழுதும் முறையைக் கூறுக.

12. திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

13. வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.

**அ)** அன்பே ______________ (தகளியாய் ஆர்வமாய்)
**ஆ)** வான்மழைத் ___________ (தூறலில் பொழிந்திடின்)
**இ)** கண்ணிரண்டும் ___________ (இலாதார் இல்லார்)
**ஈ)** வெண்ணிலவு ___________ (காய்கிறது ஒளிர்கிறது)
**உ)** வெய்யோன் ___________ (காய்ந்திட ஒளிர்ந்திட)

14. மூன்றாவது சீர் அமைத்து எழுதுக.

**அ)** கல்வி கரையில ___________ **ஆ)** கல்லாரே ஆயினும் ___________
**இ)** நல்லவை செய்யின் ___________ **ஈ)** அவமதிப்பும் ஆன்ற ___________
**உ)** உண்ணாது நோற்பார் ___________

15. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

16. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

17. "எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்" - யார்க்கு?

18.. வெண்பாவிற்கான இலக்கணம் எழுதுக.

19. வெண்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

20. **"**மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது**"** - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?

21. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

22. "மூச்சு நின்று விட்டால்
பேச்சும்
அடங்கும்" - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.

23. கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீஇ யற்று - பொருள் கூறுக.

24. தொன்மம் - விளக்கம் தருக.

25. பேச்சு வழக்கில் தொன்மம் வெளிப்படும் இருதொடர்களை எழுதுக.

26. உன்மனம் ஒரு பாற்கடல்
அதைக் கடைந்தால்
அமுதம் மட்டுமல்ல
ஆலகாலமும் வெளிப்படும் என்பதை
நீ அறிவாய் அல்லவா? - இக்கவிதையில் வெளிப்படும் தொன்மம் யாது?

27. **பொருள் கூறுக.:** **அ)** வெகுளி - **ஆ)** புணை -**இ)** ஏமம் - **ஈ)** திரு -

□ □ □

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**வினாக்களின் தலைப்புகளுக்கு ஏற்றவாறு விடையளி :**

**01. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

01) தலை, தளை, தழை -
02) கலை, களை, கழை -
03) அலை, அளை, அழை -
04) விலை, விளை, விழை -
05) களம், கலம் -
06) புல் - புள் -
07) கான் - காண் -
08) ஊண் - ஊன் -
09) தின்மை - திண்மை -

**02. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

1. என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டுத் தீர்ப்பார்கள்.

2. எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய், நிறைய தன்னம்பிக்கை கொள்.

3. நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும்பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.

4. மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

5. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

**03. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**
**(வேற்றுமை உருபுகள் - ஐ, ஆல், கு, இன், அது, கண்)**

1. குமரன் வீடு பார்த்தேன்.
2. மாறன் பேச்சுத்திறன் யார் வெல்ல முடியும்.
3. போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி பாராட்டுகள் குவிந்தன.
4. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
5. அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்.
6. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.

**04. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக**

1) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
2) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
3) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
4) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
5) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.
6) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**05. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அகமைக்க :**

**1. பலகை - 2. தாமரை - 3. கோவில் - 4. வெங்காயம் - 5. தலைமை -**

**06. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

1) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு, நீயும் புரிஞ்சுக்கோ.
2) நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.
3) அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்யெதான.
4) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு?
5) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
6) ரவைக்கு சித்தப்பனை காவலுக்குப் போவ சொல்.

**07. ஈற்றடி எழுதி துளிப்பாவை நிறைவு செய்க.**

1) பூட்டிய வீட்டிலும் பூத்துச் சிரிக்கிறது -------
2) விழும் மரங்கள் அழியும் காடு -----
3) பூத்த மலரொன்று பறக்கிறது -----
4) அப்படியென்ன சொல்லியது காற்று, குதித்தாடுகிறது மேகம் --
5) வானம் அழுகிறது; பூமி சிரிக்கிறது ----

**08. கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.**

1. கபிலன் திறமையானவர் என்று ___________ **(குமரன்)** தெரியும்.
2. நேற்றுமுதல் ___________ **(அணை)** நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.
3. உங்களுக்கு ___________ **(யார்)** என நன்மை என நினைக்கிறீர்கள்.
4. முருகன் ___________ **(வேகம்)** சென்றும் பேருந்தைப் பிடிக்க இயலவில்லை.
5. நம்முடைய ___________ **(தேவை)** அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

**09. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.**

1. வானம், பற, நிலவு, தொடு
2. சருகு, விழு, மண், அலை
3. விண்மீன், ஒளிர், எரி, விழு
4. குதிரை, வேகம், ஓடு, தாவு
5. குழந்தை, நட, தளிர்நடை, விழு
6. திரை, காண், கைதட்டல், மக்கள்

**10. மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. ஆற அமர
2. ஆணி அடித்தாற் போல
3. அகலக்கால்
4. வழிவழியாக
5. கண்துடைப்பு

**11. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

01. வாழைக்காட்டில் குயில்கள் அலறிக்கொண்டும் காகங்கள் கூவிக்கொண்டும் இருந்தன.

02. முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான்.

03. கோவிந்தன் குடியிருக்க சுவர் கட்டி கூரை அமைத்தார்.

04. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக்குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்.

05. ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

06. பனைமட்டையால் கூரை வைத்திருந்தனர்.

**12. விடைக்கேற்ற வினா அமைத்தல்:**

**01.** குடும்பம் என்ற சொல் முதன்முதலில் திருக்குறளில்தான் இடம்பெற்றுள்ளது,

**02.** நடுவண் அரசு 2005-ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

**03.** சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர்செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

**04.** 1856-இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

**05.** “யதார்த்த நிகழ்வைப் படைப்பாளுமையுடன் வெளிப்படுத்துவதே ஆவணப்படம்” என்கிறார் கிரியோர்சன்.

**13. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

**01.** தாமரை இலை நீர் போல -

**02.** கிணற்றுத் தவளை போல -

**03.** எலியும் பூனையும் போல -

**04.** அச்சாணி இல்லாத தேர் போல -

**05.** உள்ளங்கை நெல்லிக்கனி போல -

**14. உவமையையும் பொருளையும் பொருத்தி எழுதுக :**

“யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே”

www.Padasalai.Net

**15. படத்துக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக.**



**அ)** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**ஆ)** வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

**இ)** சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக :**

**01.** “ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்” - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**02.** “வருபவர் எவராயினும் நன்றி செலுத்து” - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**03.** எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப் பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**04.** “ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்” - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**அணி விளக்கம் தருக.**

**01.** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**02.** கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.
சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**03.** அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் -
இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**04.** எடுத்துக்காட்டு உவமையணியை விளக்கிக் கீழ்க்காணும் குறளுக்கு இவ்வணியைப் பொருத்தி எழுதுக.
துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்.

**05.** எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.
இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

www.Padasalai.Net

6. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.
இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

7. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து-
இக்குறட்பாவின் உவமையைப் பொருளோடு பொருத்துக.

8. உடம்பாடு இலாதார் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடன்உறைந் தற்று.
இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**

01. யானைக்கும் அடி சறுக்கும்

02. தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

03. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

04. எறும்பு ஊரக் கல்லும் தேயும்

05. ஊழி பெயரினும் தாம் பெயரார்

**இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)**

**இயல் - 1**

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம்
அமைத்த பெருமாட்டி! - **கண்ணதாசன்**

**இயல் - 2**

வெட்டி யடிக்குது மின்னல் - கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் - கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய - மழை
எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா! - **பாரதியார்**

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் - 3**

பெற்றெடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி
பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க
ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்
உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?
கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று
கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்
தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட
தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம் - **நாமக்கல் கவிஞர்**

**இயல் - 5**

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்! - **கவிமணி தேசிக விநாயகம்**

**இயல் - 6**

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ? - **பாரதிதாசன்**

**இயல் - 7**

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன் - **நா. காமராசன்**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் - 8**

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங் காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே.

- **திரிகூடராசப்பக் கவிராயர்**

**கலைச்சொல் :**

01. Subscription
02. Archive
03. Fiction
04. Manuscript
05. Biography
06. Bibliography
07. Platform
08. Level Crossing
09. Train Track
10.. Metro Train
11. Railway signal
12. Ticket Inspector
13. Lobby
14. Tips
15. Checkout
16. Mini Meals
17. Arrival
18. Passport
19. Departure
20. Visa
21. Conveyor Belt
22. Domestic Flight
23. Take off
24. Affidavit
25. Jurisdiction
26. Allegation
27. Plaintiff
28. Conviction
29. Artist
30. Cinematography
31. Animation
32. Sound Effect
33. Newsreel
34. Multiplex Complex
35. Debit Card
36. Teller
37. Demand Draft
38. Mobile Banking
39. Withdrawal Slip
40. Internet Banking
41. Stamp Pad
42. File
43. Stapler
44. Rubber Stamp
45. Folder
46. Eraser

**தமிழாக்கம் தருக :**

01. Learning is a treasure that will follow its owner everywhere.

02. A new language is a new life.

03. If you want people to understand you, speak their language.

04. Knowledge of languages is the doorway to wisdom.

05. The limits of my language are the limits of my world.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## எழுதிப் பழகுக.

### மனப்பாடப்பகுதி, பாவகை, திணை, துறை, அணி விளக்கம்

01. **அ) ஓங்கலிடை வந்து ...** எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடலை எழுதுக.

**ஆ)** பாடல் இடம் பெற்ற நூல் மற்றும் பா வகையைக் குறிப்பிடுக.

**இ)** இப்பாடலுக்குரிய பொருள் வேற்றுமை அணியை விளக்குக.

02. **வையகம் பனிப்ப --** எனத் தொடங்கும் நெடுநல்வாடைப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**அ)** பா வகை குறிப்பிடுக

**ஆ)** வாகைத்திணை, கூதிர்ப்பாசறை ☐ இச்செய்யுளுடன் பொருத்திக் காட்டுக.

03. **(i) துன்பு உளது எனின்** - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை ,, ,, **பாவகை** எழுதுக

**(ii) குகனோடும் ஐவர் ..** எனத் தொடங்கும் கம்பராமாயனப் பாடலை ,, ,, **பாவகை எழுதுக.**

04. **விண்வேறு ..** எனத் தொடங்கும் பாடலை எழுதி பாவகையையும் குறிப்பிடுக.

05. **அறிவும் புகழும்** எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**அ)** பா வகை குறிப்பிடுக.

**ஆ)** பாடாண் திணை, பரிசில் துறை - இச்செய்யுளுடன் பொருத்திக் காட்டுக.

**இ)** கலன், கலப்பை - பொருள் கூறுக.

**ஈ)** எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே - பொருள் கூறுக.

06. **காய்நெல் அறுத்து** எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலை அடிமாறாமல்எழுதுக.

**அ)** பா வகை குறிப்பிடுக.

**ஆ)** பாடாண் திணை, செவியறிவுறூஉத் துறை - இச்செய்யுளுடன் பொருத்திக் காட்டுக.

07. **ஒருமையுடன் ...** எனத் தொடங்கும் தெய்வமணிமாலை அடிமாறாமல் எழுதுக.

**அ)** பாடல் இடம் பெற்ற நூலின் பெயரைக் குறிப்பிடுக.

**ஆ)** இயற்றியவர் யார்?

**இ)** பாவகை எழுதுக.

08. **குழல்வழி ...** எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**அ)** பாவகை எழுதுக.

09. **பாதகர் குழுமிச் ...** எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**அ)** பாவகை எழுதுக.

10.... **என ஆங்கு ...** எனத் தொடங்கும் சிறுபாணாற்றுப்படைப் பாடலை அடிமாறாமல் எழுதுக.

**அ)** பாவகை எழுதுக.

### 11. திருக்குறள்

1. அது 2. படும் 3. அரிது 4. பொருள் 5. வரும் 6. சினம் 7. மிகும் 8. அரண் 9. அறிவு 10. சுடும் -- **என முடியும் குறட்பாக்களை எழுதுக.**

1. நன்றி 2. எந்நன்றி 3. ஏதிரதாக் 4. நல்லினத்தின் 5. வினைத்திட்பம் 6. சொல்லுதல் 7. உருவுகண்டு 8. கடன்அறிந்து 9. வாள்போல் 10. புழகிய .. **எனத் தொடங்கும் குறட்பாக்களை எழுதுக.**

****மற்ற வினாக்களை தமிழ்ப்பாடப் புத்தகத்தின் துணை கொண்டு படிக்கவும்****

**“என் மதிப்பும் மதிப்பெண்ணும் என் பேனா முனையில்”**

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com